**<u>மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், கிருஷ்ணராயபுரம்</u>**

O.S.No23/2024

<u>Witness – PW.3</u>

**<u>Court</u>**

| | | | |
|---|---|---|---|
| பெயர் : | ராமலிங்கம் | கிராமம் : | |
| தந்தை பெயர் : | காராளன் | வட்டம் : | |
| மதம் : | | தொழில் : | |
| ஜாதி : | | வயது : | 57 |

வாதி தரப்பு சாட்சிக்கு சத்திய பிரமாணம் செய்யப்பட்டு 10.07.2026ம் தேதியில் வாக்குமூலம் பதிவு செய்யப்பட்டது.

**<u>முதல் விசாரணை</u>**

1) நான் இந்த வழக்கில் 3ம் நபர் ஆவேன். எனக்கு நீதிமன்றத்தில் இருந்து சம்மன் வந்ததன் அடிப்படையில் சாட்சியம் அளிக்க வந்துள்ளேன். நான் வளையல்காரன்புதூரில் குடியிருந்து விவசாய வேலை செய்து வருகிறேன். வளையல்காரன்புதூர் எந்த வருவாய் கிராமத்தில்வருகிறது என்றால் ரங்கநாதபுரம் தெற்கு வருவாய் கிராமத்தில் உள்ளது. எனக்கு விவசாய நிலம் எங்குள்ளது என்றால் வளையல்காரன்புதூரில் உள்ளது. அங்கு சர்வே எண். 705/4ல் இடம் உள்ளதா என்றால் உள்ளது.

2. சர்வே எண். 705/4 பட்டா எண். 8555 தாக்கல் செய்கிறேன். (**சர்வே எண். 705/4ல் பட்டா எண். 8555 – 3ம் தரப்பு சாட்சி சான்றாவணமாக (X1)குறியீடு செய்யப்படுகிறது.**) சர்வே எண்.705ல் என்னுடன் யார் விவசாயம் செய்து வருகிறார்கள் என்றால் சிவசுப்பிரமணியன், அம்மையப்பன், செல்லம்மாள் வகையறா, லோகநாதன் ஆகியோர்கள் விவசாயம் செய்து வருகிறார்கள். லோகநாதன் தான் இந்த வழக்கை போட்டுள்ளார்கள் என்ற விவரம் தெரியுமா என்றால் தெரியும்.

3. சர்வே எண். 705 ல் விவசாய நிலத்திற்கு எங்கிருந்து தண்ணீர் பாசனம் வருகிறது என்றால் சர்வே எண். 705/12 ல் உள்ள கிணற்றிலிருந்து தண்ணீர் பாசனம் வருகிறது. எதன் மூலம் தண்ணீர் இறைக்கிறார்கள் என்றால் கரண்ட் மோட்டார் மூலம் இறைக்கிறார்கள். சர்வே எண்.705/12 ல் கிணற்றிலிருந்து வாய்க்கால் எந்தெந்த சர்வே எண்ணில் போகிறது என்றால் 705/12 லிருந்து 705/7, 6, 5 , 4 , 3, 2 , 1, ஆகிய சர்வே எண்களில் வாய்க்காலில் சென்று பாய்கிறது .

4. அந்த வாய்க்கால் எல்லோருக்கும் பாத்தியம். தற்போது கிணற்றின் நிலமை என்ன என்றால் மோட்டார் ரிப்பேர் ஆகிவிட்டது அதனால் தண்ணீர் பாய்ச்சவில்லை அதனால் மானவாரி விவசாயம் செய்து வருகிறேன். லோகநாதன் எப்படி பாசனம் செய்கிறார் என்றால் அவர் இடத்தில் தனியாக சர்வே எண். 705/6 ல் போர் போட்டு தனியாக மின் இணைப்பு பெற்று நீர் பாசனம் செய்து வருகிறார்.

5. சர்வே எண். 705/6 லிருந்து எந்த நிலத்திற்கு லோக நாதன் பாசனம் செய்கிறார் என்றால் சர்வே எண். 705/6 லிருந்து 705/5, 4, 2 வழியாக சர்வே எண். 705/3 ற்கு பாசனம் செய்து வருகிறார். எந்த வழியாக லோகநாதன் பாசனம் செய்துவருகிறார் என்றால் முதலில்வாய்க்காலில் செய்தார். தற்போது சர்வே எண். 705/6 லிருந்து 705/5, 4, 2 வழியாக மண்ணுக்கடியில் பைப்லைன் அமைத்துள்ளார். அந்த வாய்க்கால் யார்யாருக்கு பாத்தியப்பட்டது என்றால் அனைவருக்கும் பொதுவாக பாத்தியப்பட்டதாகும் பைப்லைன் வாய்க்காலுக்கு அடியில் போடப்பட்டது.

6. யாரை கேட்டு பைப்லைன் போட்டார் என்றால் எல்லோரிடமும் கேட்டு பைப்லைன் போட்டார். அனைவரின் சம்மதத்துடன் பைப்லைன் அமைக்கப்பட்டது என்றால் சரிதான். செல்லம்மாள் வகையறாவிடம் லோகநாதன் கேட்டாரா என்றால் கேட்டுத்தான் போட்டிருப்பார். எவ்வளவு வருடமாக லோகநாதன் பைப்லைன் அமைத்து தண்ணீர் பாய்ச்சுகிறார்என்றால் 4 வருடமாக பாய்ச்சி வருகிறார். இந்த விவரம்எ னக்கு நேரிடையாக தெரியுமா என்றால் தெரியும்.

**<u>பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணைக்காக வழக்கு வாய்தா ஒத்திவைக்கப்படுகிறது.</u>**

என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக் காண்பிக்கப்பட்டு சரியென ஒப்புக் கொண்டு என் முன் கையெழுத்து செய்தார்.

RAMAIYAH BAGYARAJ

Digitally signed by RAMAIYAH BAGYARAJ
DN: cn=RAMAIYAH BAGYARAJ, ou=MADURAI, o=TAMIL NADU STATE JUDICIAL SERVICE, st=Tamil Nadu, c=IN
Date: 2026.07.16 11:00:46 +0530

மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்,
கிருஷ்ணராயபுரம்.